# கீழ்க்கண்ட வாக்கியங்களைச் சத்தமாகப் படித்துப் பழகவும்.

- சில்லென்று காற்று வீசியது.
- காலம் பொன் போன்றது.
- யானை ஆற்றில் இறங்கியது.
- குதிரை வேகமாக ஓடியது.
- மழை  வருவதுபோல் இருந்தது.
- தோசைக்குச் சர்க்கரை கேட்டேன்.
- ஆற்றுநீர் வேகமாக ஓடியது.
- நதிநீர் கடலில் கலந்தது.
- உழைப்பை ஊதியமாகப் பெற்றான்.
- சூரியவெப்பம் தாங்கமுடியாது நின்றான்.
- உணவகம் சென்று வந்தான்.
- வாக்கியம் அமைத்து எழுதினான்.
- ஞாயிறு விடுமுறை நாளாகும்.
- ஆசிரியர் பாடம் நடத்தினார்.
- கதிரவனின் கதிர்கள் வெப்பத்தை வீசுகின்றன.

# கீழ்க்கண்ட வாக்கியங்களைச் சத்தமாகப் படித்துப் பழகவும்.

- சான்றோர் சொல்படி நட.
- கண்ணன் வீட்டிற்குச் சென்றேன்.
- வீட்டுப்பாடங்களை விரைந்து முடித்தான்.
- கால்கள் செயலிழந்து விட்டன.
- காலாண்டு விடுமுறை தொடங்கியது.
- அம்மா சமையலறையில் இருந்தார்.
- அப்பா வேலைக்குச் சென்றார்.
- அண்ணன் நாளை வருகின்றான்.
- தங்கை பள்ளிக்குச் சென்றாள்.
- ஆடு காட்டில் மேய்ந்தது.
- பசு பால்தரும் விலங்கு.
- பிறந்தநாள் பரிசு வழங்கினான்.
- சிறப்பு வகுப்பு நடத்தப்பட்டது.
- விறகிற்காக மரத்தை வெட்டினான்.
- எண்ணெய்ப் பலகாரங்களைச் சாப்பிடக்கூடாது.